# மேட்டுப்பாளையம் நகராட்சி

11.11.2019ம் தேதி திங்கட் கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

**1..** மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளிப்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள மாட்டிறைச்சி கடை எண்.1 மற்றும் 4 தற்போது பழுது நீக்கம் செய்யப்பட்டு உபயோகிக்கும் நிலையில் உள்ளது என்று வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளதன்படி மேற்படி கடைகளுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது.

அதன்படி மாட்டிறைச்சி கடை எண்.1 மற்றும் 4ற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் , ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன் வரவில்லை. கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| | | கடைஎண்கள் | மாதவாடகை |
|---|---|---|---|
| 1. | திரு.ஐ.தஸ்தகீர் ரஃபி<br>த/பெ.இசாக்<br>6கே 10ஏ, பாரிகம்பெனி சைட்,<br>காட்டூர், மேட்டுப்பாளையம். | 1 மற்றும் 4 | ரூ.2200/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை குழு நிர்ணயம் செய்த மாதவாடகை தொகையை விட ரூ.130/- கூடுதலாக கேட்டு உள்ளதால் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடையை ஒப்படைப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2442/2019/அ1

**2.** இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் நவீன ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆகியவைகளுக்கு 31.12.2019 உடன் 3ஆண்டு குத்தகை உரிமகாலம் முடிவடைவதால் மீண்டும் 3ஆண்டு காலத்திற்கு ஒப்படைப்பு செய்ய ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோர ஒருவரும் வரவில்லை. கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய பயணிகள்பொருட்கள் பாதுகாப்புஅறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.கந்தசாமி<br>த/பெ.காளிமுத்து,<br>6கே/12, லட்சுமி நகர்,<br>மணிநகர்,<br>மேட்டுப்பாளையம் | <u>3-வது அழைப்பு 07.11.2019</u><br>வருடம் ஒன்றுக்கு ரூ.82500/- |
| 2. | நவீன ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் உரிமம் | திரு. ஜாபர் சாதிக்,<br>த/பெ.அமீர் அம்ஜா,<br>13ஏ/46,<br>மதினாநகர்,<br>மேட்டுப்பாளையம் | <u>2-வது அழைப்பு 31.10.2019</u><br>வருடம் ஒன்றுக்கு ரூ.1,76,000/- |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சென்ற ஆண்டைக்காட்டிலும் மூன்றாண்டு சராசரி தொகையைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மேற்படி இனங்களை மீண்டும் 01.01.2020 முதல் 31.12.2023 முடிய 3 ஆண்டு காலத்திற்கு ஒப்படைப்பு செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4555/2017/அ1

| | |
|---|---|
| 3 | இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள ஈப்பு எண்கள் த.நா 40சி 7079, த.நா 40சி 7087 ஆகிய வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை செலுத்த வேண்டிய காலம் வருகிற 02.12.2019 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, மீண்டும் வருகிற 02.12.2019 முதல் 02.12.2020 ஆம் தேதி வரை பிரிமியம் தொகை ரூ.11903 + ரூ.11903 = ரூ.23806/ஐ United India Insurance Company LTD ற்கு செலுத்த மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4100/2017/இ1 |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2017 – 2018 ஆம் ஆண்டில் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகளின் விவரத்தினை மாலை மலர் (தொழில் மலர் 2019) விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காண் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.16800/-ஐ வழங்ககோரி மாலை மலர் நாளிதழ் கோவையிலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.16800/-ஐ மாலை மலர் நாளிதழிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3388/2017/அ1 |
| 5 | இந்நகராட்சியில் 2018- 2019 ஆம் ஆண்டில் செய்த வளர்ச்சி பணிகளின் விவரத்தினை தினத்தந்தி (தொழில் மலர் 2019ல்) விளம்பரம் செய்யப்பட்டது. இந்நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூ.43,260/- வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்காண் விளம்பரக் கட்டணம் ரூ.43,260/-ஐ தினத்தந்தி நாளிதழிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3388/2019/அ1 |
| 6 | இந்நகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை (Bio Mining) பணி Private Managed Consultant நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நியமனம் செய்யப்பட்ட Project Management Consultant ற்கு தொகை வழங்கும் பொருட்டு அண்ணா பல்கலைகழகத்திடமி ருந்து ரூ.495600/- ஐ The Director Centre For Teachnology Development and Transfer (CTDT) Anna University Chennai – 600025 என்கிற பெயரில் வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1845/2018/இ1 |
| 7 | 10th SHPC ஆய்வு கூட்ட நாள் 31.10.2019 நிகழ்ச்சி குறிப்பு மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு Resource Recovery Centre உலர் கழிவு சேகரிப்பு மையம் அமைப்பதற்கு ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ள நெல்லித்துறை சாலையில் RRC அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு பார்வையில் கண்டுள்ள ஆய்வு கூட்ட நிகழ்ச்சி குறிப்பின் அடிப்படையில் 10 MT குப்பைகளை நவீன முறையில் உலர் கழிவுகளை எரியூட்டி (Incineration) Process மூலம் அக்கழிவுகளை Processing மேற்கொண்டு அதில் கிடைக்கப்பெறும் (End Products) சாம்பல் மற்றும் கார்பனை கொண்டு Ash Bricks அல்லது Pavement Blocks தயாரிக்க ரூ.1.00 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>இத்திட்டத்தின் மூலம் மேட்டுப்பாளைய்ம நகராட்சி, உதகமண்டலம் நகராட்சி , கூடலூர் , குன்னூர், நெல்லியாளம், சத்தியமங்கலம் மற்றும் புஞ்சை புளியம்பட்டி நகராட்சிகளில் இருந்து சேகரமாகும் உலர் கழிவுகளை மேட்டுப்பாளையம் நகராட்சியில் அனுமதி வழங்கப்பட்டுள்ள Incinerator மூலம் Processing மேற்கொள்ள மற்றும் மேல்நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். |
| 9 | இந்நகராட்சியன் ஆடுவதை சாலை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய இசைவாணையைப் புதுப்பிக்காமல் இயங்கி வருவதாகவும் இசைவாணையைப் புதுப்பிக்க இசைவாணைக் கட்டண நிலுவைத் தொகை ரூ.43,600/-ஐ உடனடியாகச் செலுத்துமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் கோவை (வடக்கு) அவர்களிடமிருந்து குறிப்பாணை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிக்கு 31.10.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு சமா்ப்பிக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ. எண்.</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீடு விழுக்காடு %</td></tr><tr><td rowspan="2">1</td><td rowspan="2">மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">9.90</td><td>திரு.வி. செல்வராஜ்</td><td>0.23% மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr><tr><td>திரு.என். ஜெகநாதன்</td><td>2.51% மதிப்பீட்டிற்கு அதிகம்.</td></tr></table><br>மேற்காணும் பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படு கிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சி மணி நகர் பகுதியில் உள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை வேண்டும் என்றும் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்களை தங்களது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். ஆகையால் அப்பள்ளியில் உள்ள கட்டிடத்தின் மேல்தளத்தில் புதியதாக வகுப்பறை அமைக்க மதிப்பீடு தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு சத்தியமூர்த்தி நகர் பகுதியில் உள்ளது. அந்த குடியிருப்பில் ஈப்பு வாகனம் நிறுத்த Shed அமைக்கவும் மேலும், குடியிருப்பிற்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு மதிப்பீடு தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

21 .11.2019ம் தேதி வியாழன் கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**.**

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1.. | அரசாணை எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.11.2019ல், 01.04.2018 முதல் அமல்படுத்தப்பட்ட சொத்துவரி சீராய்வினை நிறுத்தி வைக்க உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.2732/2018/அ2 |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

29 .11.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

1. தலைமை நீரேற்று நிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் நவம்பர் – 2018 முதல் பிப்ரவரி -2019 வரை ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.1,23,909/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | நவம்பர்– 2018 மிகை நேரப்படி | | டிசம்பர்– 2018 மிகை நேரப்படி | | ஜனவரி – 2019 மிகை நேரப்படி | | பிப்ரவரி – 2018 மிகை நேரப்படி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | |
| I | தலைமை நீரேற்று நிலையம் | | | | | | | | | | |
| 1 | எஸ். மகேஸ் குமார் | மி.ப.நிலை 1 | 32 | 6482 | 32 | 6273 | 40 | 8292 | 32 | 7344 | |
| 2 | ஆர்.ராஜா | மி.ப.நிலை 1 | 40 | 7194 | 32 | 5569 | 32 | 5896 | - | - | |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 40 | 6177 | 40 | 5977 | 40 | 6142 | 40 | 6800 | |
| 4 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 32 | 4709 | 32 | 4557 | 40 | 5852 | 32 | 5184 | |
| 5 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | - | - | 24 | 2584 | 24 | 2584 | 32 | 3815 | |
| II | காரமடை நீரேற்று நிலையம் | | | | | | | | | | |
| 6 | டி.ஜான் பாஸ்கர் | காவலாளி | 40 | 5886 | 40 | 5696 | 40 | 5696 | 32 | 5200 | |
| | | | மொத்தம் | 30448 | | 30656 | | 34462 | | 28343 | 123909 |

மொத்தம் ரூ. 1,23,909/– ( ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது மட்டும்).

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 30.03.1989ம் தேதிய ந.க.எண்.24372/89/ஓபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் நவம்பர்–2018 முதல் பிப்ரவரி – 2018 வரையிலான நான்கு மாதங்களுக்கான மிகைநேரப்படி ரூ.1,23,909/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.5220/2011/இ1

2. தலைமை நீரேற்று நிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் மார்ச் – 2019 முதல் ஜீன்-2019 வரை ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.1,23,195/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மார்ச்– 2019 மிகை நேரப்படி | | ஏப்ரல் – 2019 மிகை நேரப்படி | | மே– 2019 மிகை நேரப்படி | | ஜீன் – 2019 மிகை நேரப்படி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | |
| I | <u>தலைமை நீரேற்று நிலையம்</u> | | | | | | | | | | |
| 1 | எஸ். மகேஸ் குமார் | மி.ப.நிலை 1 | 32 | 6633 | 40 | 8568 | 24 | 4975 | 32 | 6854 | |
| 2 | ஆர்.ராஜா | மி.ப.நிலை 1 | 40 | 7370 | 16 | 3046 | 40 | 7370 | 24 | 4570 | |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 32 | 4913 | 32 | 5077 | 32 | 4913 | 32 | 5077 | |
| 4 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 32 | 4682 | 32 | 4838 | 40 | 5853 | 32 | 4838 | |
| 5 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 24 | 2584 | 16 | 1882 | 32 | 3642 | 32 | 3763 | |
| II | காரமடை நீரேற்று நிலையம் | | | | | | | | | | |
| 6 | டி.ஜான் பாஸ்கர் | காவலாளி | 40 | 5872 | 32 | 4854 | 40 | 6033 | 32 | 4988 | |
| | | | மொத்தம் | 32054 | | 28265 | | 32786 | | 30090 | 123195 |

மொத்தம் ரூ. **1,23,195/– (** ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து நூற்றி தொன்னூற்றி ஐந்து மட்டும்**).**

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **30.03.1989**ம் தேதிய ந.க.எண்.**24372/89/**ஒபி**1** எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் மார்ச்**–2019** முதல் ஜீன் **–2019** வரையிலான நான்கு மாதங்களுக்கான மிகைநேரப்படி ரூ.**1,23,195/–**ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.**

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.**5220/2011/**இ**1**

3. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்த்தாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண். 101. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள். 30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016, நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன்படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016, நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019, நாள்.28.02.2019ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், சுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்கவும், பொதுச் சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 31.10.2019 வரை பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.67, நாள்.05.07.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.11.2019 முதல் 31.01.2020 வரை 3 மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகித்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2019 – 20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 19.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மோட்டார்கள், நீர்முழ்கி மோட்டார்கள் பழுது நீக்கம் செய்தல் | 5.00 | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 2.24% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | 5.00 | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 1.86% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| | | | எம். வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 3 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வால்வு பிட் தொட்டிகளை மராமத்து பணி செய்தல் | 3.00 | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 1.54% மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

5 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019–20ன் கீழ்க்கண்ட பணிக்கு 19.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.22 மற்றும் 23க்குட்பட்ட மகாதேவபுரம் 8வது வீதியில் புதிதாக சிறுபாலம் கட்டுதல் | 2.30 | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 1.38% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1643/2013/இ1

6 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019 –20ன் கீழ்க்கண்ட பணிக்கு 19.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | புதிய நகராட்சி அலுவலகத்தில் வாகனம் நிறுத்த மேற்கூரை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | 7.00 | சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 2.81% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1643/2013/இ1

7 2018-2019ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.41ல் மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2018-2019ஆம் ஆண்டு தணிக்கை மேற்கொண்ட வகையில் தணிக்கை கட்டணம் ரூ. 1,25,894/-ஐ அரசு கணக்கில் செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :
வருவாய் நிதியிலிருந்து செலுத்த அனுமதிக்கலாம்.
ந.க.எண்.115/2019/அ3

8 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019 –20ன் கீழ்க்கண்ட பணிகளுக்கு 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 ல் ஏசுதுறை சந்து பகுதியில் சிறுபாலம் மற்றும் தண்ணீர்துறை சாலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்துப் பணிகள் செய்தல | 3.50 | எம். வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஜி.கே.எஸ்.சேதுபதி | 1.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.17 ராஜபுரம் பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.60 | எம். வேலுசாமி | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஜி.கே.எஸ்.சேதுபதி | 2.24% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1643/2013/இ1

9 இந்நகராட்சியில் உள்ள TN 40 3517 JCB வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து வழங்க 22.10.2019 ஆம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகிளின் ஒப்புநோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்ய லட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், 63,வரப்பாளையம்நால்ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு | ரூ. 2,48,000/- |
| 2 | முருகன் ஆட்டோஸ், வரப்பாளையம், ஈரோடு | ரூ.2,70,300/- |

அலுவலகக் குறிப்பு :

1. அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2794/2019/இ1

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீபாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ் 63, வரப்பாளையம் நால் ரோடு, கருங்கல்பாளையம் , ஈரோடு என்கிற பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மேலும் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்ட காரணத்தினால் அவசர அவசியம் கருதி பணிமனைக்கு பணி உத்தரவு வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.

10 இந்நகராட்சியில் ஆணையர் அவர்களுக்கு ஒரு HP Laser Color Printer மற்றும் பொறியாளர் அவர்களுக்கு ஒரு கணினி ஒரு Laser Color Printer வாங்குவதற்கு ரூ.1 இலட்சம் தேவைப்படுவதால் அதனை தரமணி பெண்கள் எழுதுபொருள் மற்றும் அச்சக கூட்டுறவு சங்கம் சென்னை. அவர்களிடமிருந்து கணினி மற்றும் Color Printer HP-2 வாங்குவதற்கு ஆணையர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3865/2019/டி1

11 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள சங்கர் நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது இந்த ஆழ்துளை கிணறு உள்ள மோட்டார் முற்றிலும் பழுதடைந்த பயன்பாடற்ற நிலையில் உள்ளது. இதனால் தண்ணீர் வசதியின்றி பொதுமக்கள் இக்கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் இக்கழிப்பிடத்திற்கு அருகில் புதியதாக ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி மற்றும் சில மேம்பாட்டு பணிகள் இக்கழிப்பிடத்திற்கு மேற்கொள்வதற்கு ரூ.3.30 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

12 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019 –20ன் கீழ்க்கண்ட பணிக்கு 28.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.8 புதியதாக கட்டப்பட்டுள்ள ஆணையாளர் குடியிருப்பிற்கு கூடுதல் வசதிகள் செய்தல் | 4.50 | சி.நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 1.54% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1643/2013/இ1

13 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்வி நிதி 2019 –20ன் கீழ்க்கண்ட பணிக்கு 28.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மணிநகர் நகரவை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை | 9.50 | சி. நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | எம். வேலுசாமி | 3.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1643/2013/இ1

14 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 19ல் உள்ள நடூர் பகுதியில் நியாய விலை கடை அருகில் உள்ள பொதுகழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் அருகில் இருக்கும் பொது மக்கள் கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாமல் சிரமப்படுகிறார்கள். இதனால் இக்கழிப்பிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் மற்றும் தண்ணீர் வசதிகள் மேற்கொள்ள ரூ.2.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

15 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள வெள்ளிப்பாளையம் ரோடு பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் கழிப்பிடத்தில் உள்ள கதவுகள், பீங்கான்கள், தண்ணீர் வசதி மற்றும் மின்வசதி ஆகிய மராமத்து பணிகளையும் மேற்கொள்ள ரூ. 3.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு , மேலும் இப்பணியை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

# மேட்டுப்பாளையம் நகராட்சி

29 .11.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை **5.00** மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

<table>
<tr><td>1</td><td>
இந்நகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் கோவை அவர்களின் நேர்முக உதவியாளர் அறிவுறுத்தியுள்ளார். டெங்கு நோய் மற்றும் சிக்குன்குனியா நோய் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் இருக்க கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.
எனவே, கொசு ஒழிப்பு இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் Pyrethrum 2% Extract 200 லிட்டர் பெற்றிடவும் ஆகும். உத்தேச செலவினம் ரூ. 2,59,600க்கும் மேற்படி மருந்தினை தமிழ்நாடு அரசு மருத்துவகழகம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற M/s அருணை என்டர்பிரைசஸ் சென்னை அவர்களிடம் பெற்றிடவும், டெங்கு புழு ஒழிப்பு மருந்து Temephos emulsifier 50%, 200 லிட்டர் பெற்றி ஆகும். உத்தேச செலவினம் ரூ.1,47,400-க்கும் மேற்படி மருந்தினை (TNMSC) அங்கீகாரம் பெற்ற M/s Alchemi Enterprises, Chennai அவர்களிடம் பெற்றிடவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.3971/2019/எச்1<br>2. பொது மக்கள் நலன் கருதி விநியோக ஆணை<br>வழங்கியமைக்கும் அனுமதிக்கலாம்.
</td></tr>
<tr><td>2</td><td>
இந்நகராட்சியில் எதிர்வரும் பருவமழை காலத்தில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்று தொற்று நோய்கள் பரவாமல் இருந்து தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் DBC பணியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்ட விபரங்களை அறிக்கையாக நகராட்சி அலுவலகத்தில் பெற வேண்டியுள்ளது.
எனவே, படிவங்களை தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற TAMCOS நிறுவனத்திடம் பெற்றிடவும் 50,000 படிவங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :
1. அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3971/2019/எச்1<br>2. பொது மக்கள் நலன் கருதி விநியோக உத்தரவு<br>வழங்கியமைக்கும் அனுமதிக்கலாம்.
</td></tr>
<tr><td>3</td><td>
மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்வி நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 29.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண்.8 சத்தியமூர்த்தி நகர் நகரவை துவக்கப்பள்ளிக்கு மராமத்து பணிகள் செய்தல்</td><td rowspan="2">5.50</td><td>ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>0.03% மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr>
<tr><td>ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்பராஸ்டக்சர்ஸ்</td><td>3.16% மதிப்பீட்டிற்கு அதிகம்.</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1643/2013/இ1
</td></tr>
</table>